திரு. வி. கே. சின்னசாமி : எனவே, இதைப் பரிசீலனை செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் அப்படி கருப்பு நிறமாக விடப் படக்கூடாது. அது சுத்தகரிக்கப்பட்டது என்று சொன்னால், அந்தத் தண்ணீர் கருப்பாக இருக்கக்கூடாது, இப்போது அந்தத் தண்ணீர் சுத்தமாக இல்லை என்பதையே, அங்கே போய்ப் பார்த்துதான் தெரிந்து வைத்திருக்கிறோம். இங்கே கொடுத்த அறிக்கையிலேகூட தண்ணீர் நல்ல நிறத்திலே இல்லை என்று கொடுத்து இருக்கிறார்கள். அதன் காரணத்தால் தான் அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, அது செய்யப்பட்டிருக்கிறது. எனவே இதைச் செய்து முடிக்கிறபோது, கருப்பு நீர் சுத்தமாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்று, அந்தத் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியும் என்று கண்டுபிடித்து இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளிடத்திலே பேசி இதை விவசாயத் திற்குக் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கும், அந்தத் தொழிற்சாலையே முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்தை எல்லாம் அடிப்படையாக வைத்து உடனடியாகக்கூட மேல்மட்டத்திலே இருந்து யாரையாவது அதிகாரிகளை நேரடியாகச் சென்று பார்த்து, உரிய நடவடிக்கையை விரைவாக மேற்கொள்வதற்கு ஏற்பாட்டைச் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 7 திரு. கோ. காளன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

7—

அம்பத்தூர்-ஆவடி பேருந்து வண்டி

*9308 திரு. கோ. காளன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஆவடிக்குச் செல்ல நேரடி பேருந்து வசதியில்லாததால் ஆவடிக்கும் அம்பத்தூர் புதிய பேருந்து நிலையத்திற்கும் இடையே பேருந்து வசதி செய்துதர அரசு முன்வருமா ?

TRUTH ALONE TRIUMPHS

[1993 பிப்ரவரி 8

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 10-20

திரு. கோ. காளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூரிலிருந்து ஆவடிக்குச் செல்லக்கூடிய நேரத்தில், ஜன நெரிசல் மிகுந்த நேரத்தில், காலை மாலை வேளைகளில் நேரடியாக அம்பத்தூரிலிருந்து ஆவடி மற்றும் சில இடங்களுக்குச் செல்ல வேண்டிய போக்குவரத்து வசதி இல்லை.. அமைச்சரவர்கள் அவ்வாறு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். பூவிருந்தவல்லியிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டைக்குச் சில வண்டிகள் வருகின்றன. அதையாவது சில வழித்தடங்களை, பூவிருந்தவல்லி—அம்பத்தூருக்கு மாற்றி, அம்பத்தூரிலிருந்து மீண்டும் பூவிருந்தவல்லி செல்லக்கூடிய அளவிற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் பகுதியில் மூன்று பேருந்து நிலையங்கள் இருக்கின்றன. அம்பத்தூர் தொழிற்பேட்டையிலிருந்து 24 வழித்தடங்களில் 117 பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். அதேபோன்று பழைய பேருந்து நிலையத்தில் சுமாராக 27 வழித்தடங்களில் 123 பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே நீங்கள் குறிப்பிட்டிருப்பது புதிய பேருந்து நிலையத்திலே இந்த பேருந்துகள் வருகின்றனவா என்ற கேள்வி. ஆகவே புதிய பேருந்து நிலையத்தின் வழியாகத்தான் இந்த பேருந்துகள் இயக்கப்படுகின்ற காரணத்தால் நான் 'இல்லை' என்று பதில் அளித்தேன்.

திரு. கோ. காளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பேருந்து நிலையத்திற்கும் பழைய பேருந்து நிலையத்திற்கும் சுமார் ஒரு பர்லாங் தூரம் தான் இருக்கின்றது. ஆகவே புதிய பேருந்து நிலையம் என்பது அம்பத்தூர் ஊரிலேயிருந்து சென்று வரக்கூடிய வழித் தடமாகும். மெயின் பேருந்து நிலையம் என்பது அம்பத்தூருக்கு மெயின்லே இருக்கக் கூடிய பேருந்து நிலையம் ஆகும். எனவே அந்த வழியாக வரக் கூடிய, அமைச்சரவர்கள் சொல்லக்கூடிய பேருந்துகள் எல்லாம் மெயின் ரோடு வழியாகத்தான் செல்கின்றதே தவிர, ஊருக்கு உள்ளாக வந்து செல்வதில்லை. எனவே அத்தகைய வழியில் பூவிருந்த

வல்லியிலிருந்து வரக் கூடிய வழித் தடத்தை அம்பத்தூர் ஊருக்குள்ளே செல்லக்கூடிய அளவிற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று கேட்சு விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 8, திரு. எஸ். ஜெயக்குமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

8—

கூட்டுறவு நூற்பாலைகளில் கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவர்களை நிர்வாக இயக்குநராக நியமித்தல்.

*9993 திரு. எஸ். ஜெயக்குமார் :

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு நூற்பாலைகளில் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகளை நிர்வாக இயக்குநராக நியமிப்பதற்குப் பதிலாக கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவர்களைப் பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதி 145ல் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அல்லது மாவட்ட துணை ஆட்சியர் பதவிக்கு குறையாத அந்தஸ்தில், கூட்டுறவுத் துறை, கைத்தறி மற்றும் துணிநூல் மற்றும் வருவாய்த் துறையில் உள்ள அலுவலர்களை கூட்டுறவு நூற்பாலைகளில் நிர்வாக இயக்குநராக அரசால் நியமிக்கப்படவேண்டுமென குறிப்பிடப் பட்டுள்ளது. சில கூட்டுறவு நூற்பாலைகளில் தொழில் நுட்ப அனுபவம் பெற்றவர்கள் அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

(ஆ) தனியாக குறிப்பேதும் இல்லை.